உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.378/2025

பெயர் :உஷாராணி (அ.சா.1)
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :சிவக்குமார்
வயது :41
கிராமம் :ஒத்தக்கடை
வட்டம் :மதுரை
தொழில் :வீட்டுக்குடித்தனம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

16.03.2026

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடையில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். வேலைக்கு செல்லவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் அப்பாவை ஆஜர் எதிரி அடித்தார். அதனால் அவரை தெரியும். என் அப்பா பெயர் செந்திலாதிபன். கடந்த 28.04.2021 அன்று மதியம் திருமோகூர் ரோட்டில் உள்ள என் வீட்டிற்கு மதியம் என் தந்தை செந்திலாதிபன் சாப்பிட வருவது வழக்கம் ஆனால் அன்றைய தினம் அவர் சாப்பிட வரவில்லை. நான் என்னவாயிற்ற என்று தெரிந்து கொள்வதற்காக ஒத்தக்கடையில் உள்ள சுதந்திரநகர் 2வது தெருவில் சென்று பார்த்த போது வீடு உள்பக்கமாக தாழிடப்பட்டிருந்தது. வீட்டினுடைய லைட், பேன் எல்லாம் ஓடியநிலையில் இருந்தன. ஜன்னல் மட்டும் திறந்தவாறு இருந்தது. நான் நீண்ட நேரம் கதவை தட்டி, தட்டி பார்த்தேன் யாரும் திறக்கவில்லை. சத்தமும் இல்லை. சிறிது நேரம் தட்டிய பிறகு காப்பாத்துமா என்று என் அப்பா சத்தம் போட்டார். அருகில் உள்ள எவர்சில்வர் பட்டறையில் வந்த நபர்களின் உதவியோடு, கதவை திறந்தோம். ஆஜர் எதிரி என் அப்பாவை அடித்து, அவர் முகத்தில் ரத்தக்காயம் இருந்தது. வீடு முழுவதும் ரத்தம், கண்ணி ஆசிட்டை ஆஜர் எதிரி ஊற்றிவிட்டார். ஆஜர் எதிரியும் அங்கு தான் இருந்தார். அதன்பிறகு என் அப்பா என்னிடம்

காவலர்களை அழைத்து வருமாறு கூறினார். நானும் சென்று ஒத்தக்கடை காவல்நிலையம் சென்று காவலர்களிடம் சொன்னேன். காவலர்கள் வந்து ஆஜர் எதிரியை சோதனையிட்ட போது, அவர் ஹேன்பேக்கில் ஸ்பிரே, சிக்கன்பொடி பாக்கெட், கயிறு, கைக்கு அணியும் கையுறை, அரிவாள், சுத்தியல் போன்ற ஆயுதங்களை அவர் ஹேன்பேக்கில் வைத்திருந்தார் மேலும் என் அப்பாவின் கொத்துசாவியையும் அவர் வைத்திருந்தார். அதன்பிறகு மீனாட்சி மருத்துவமனைக்கு என் அப்பாவை என் கணவர் அழைத்து சென்றார் நான் ஒத்தக்கடை காவல்நிலையம் சென்றுவிட்டேன். காவல்நிலையத்தில் நான் புகார் அளித்தேன். சாட்சியிடம் புகார் காட்டப்பட்டு, அதை தான் எழுதியதாகவும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று சாட்சி ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் தந்தை 2 கண்களும் பார்வை இழந்தநிலையில் இருந்தார். அதன்பிறகு என் தந்தை இறந்துவிட்டார். சாட்சியிடம் ஆயுதங்கள் மற்றும் சான்று பொருட்கள் காட்டப்பட்டன. அரிவாள் அவர் கையில் வைத்திருந்ததாகவும், மற்ற பொருட்களான ஸ்பேரே, கயிறு, கையுறை, சுத்தியல், ஆசிட், மசாலா பொடி, தலையணை ஆகியன அவருடைய ஹேன்பேக்கில் வைத்திருந்தார் என்று சாட்சி குறிப்பிடவே மேற்படி சான்று பொருட்கள் அனைத்தும் அரசு தரப்பு சான்றுபொருள் 1 முதல் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை காவலர்கள் விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.16 19:55:34 +0530

Assistant Sessions Judge

Melur